ஓம்

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமதே ராமாநு ஜாயநம:

க்ருஷ்ணாதேவ ஸமுத்திதம் ஜகதிதம், க்ருஷ்ணஸ்ய
தாஸோஸ்ம்யஹம்

க்ருஷ்ணே திஷ்டதி விச்வமேததகிலம், ஹேக்ருஷ்ண
ஸம்ரக்ஷமாம்

ஸ்ரீராமாநுஜர் வைபவம்

பராங்குச திரு அவாதர-௵ 5068 பராபவ-௵ மார்கழி-மீ

ஸ்ரீ க்ருஷ்ணதாஸர்

ராவ் பஹதூர் ஸ்ரீ எம். ஏ. ரங்கஸ்வாமி அய்யங்கார், பி. ஈ

மாஜி டெபுடி ப்ரதம என்ஜினியர், பீஹார்ப் பிரதேசம்,

சேஷாத்ரிபுரம், பெங்களூர்-20.

ரங்கவிலாஸ்'

No. 9, South End Road,

Bangalore (20.)

PRICE விலை 1—00

ஓம்

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமதே ராமாநுஜாயநம:

ஆசிரியரின் நன்றி விளக்கம்

பகவத் ஸ்ரீராமநுஜரின் வைபவத்தை எழுதி வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். எல்லோருக்கும் பரமனிடத்தில் பக்தியும், ஆசாரிய பக்தியும் வளருமாறு அநுக்கிரகம் பெறவேண்டு மென்று நோக்கத்துடன் எழுதினேன் செந்தமிழில் !

பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ காஞ்சீ வாதகேசரி அழகிய மணவாள யதீந்த்ரப்ரவண ராமாநுஜ ஜீயர் ஸ்வாமிகள் அன்புடன் எழுதிய ஆசிமொழிக்கு எனது மனமார்ந்த நன்றி செலுத்துகிறேன். ஸ்வாமிகள் திருவடிகளில் தண்டம் ஸமர்பிக்கிறேன்.

இந்நூலை, அச்சிட, என்னை, பாரத் விசை அச்சகத்துக்கு அழைத்து சென்றவரும் ஸ்ரீ ராமாநுஜாசார்யருடைய சித்திர படத்தை வாங்க உதவி செய்தவரும் ஸ்ரீ காஞ்சீ பாதகேசரி, அழகிய மணவாள, ஜீயர் ஸ்வாமிகளிடம், அழைத்து சென்று அவர் தர்சனமும், ஆசீர்வாதமும் கிடைக்க உயர்தர உதவி செய்த, பெரியவாள் டெங்கணிக்கோட்டை, கருடன் கோவில் உபய வேதாந்த ப்ரவர்த்தக பகவத் பாகவதாசார்ய கைங்கர்ய நிஷ்டராய் எழுந்தருளியிருக்கும், கிடாம்பி ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யங்கார் ஸ்வாமி களுக்கு என் மனமார்ந்த நன்றி செலுத்துகிறேன்.

மைசூர் கத்வாடி புரத்தக் கிராஹாரத்திலிருக்கும் ஸ்ரீமான். உ. வே. ஜீ. ஆர்-ஜோஸ்யர் M. A. F. R. Es. ஸ்வாமிகள், ஸ்ரீராமாநு ஜரின் போட்டோவை கொடுத்து உதவி செய்தவருக்கும் என் மனமார்ந்த நன்றி செலுத்துகிறேன்.

மேலுகோட்டை திரு நாராயண புரம், ஸ்ரீ ஸாநுதாஸ கிருந்த மாலா ஆசிரியர் வித்யா பூஷண A. N. ஸ்ரீ நிவாஸய்யங்கார் B. Sc (Hon) ஸ்வாமிகள் இந்த ஸ்ரீராமாநுஜர் புகை படம் பிளாக் கொடுத்து உதவி செய்தார் அவருக்கும் என் மனமார்ந்த நன்றி செலுத்துகிறேன்.

இந்நூலைச் குறைந்த கால அளவில் சிறந்த முறையில் அச்சிட்டு தந்த பாரத் விசை அச்சகம், அதிகாரி ஸ்ரீ. எ. வெங்கடேசன் நாயகர் அவர்களுக்கும் சித்திராலய மானேஜர் ஸ்ரீ ராஜாராமருக்கும், என் மனமார்ந்த நன்றி செலுத்துகிறேன்.

ஸ்ரீ ராமாநுஜர், தமிழரின் இல்லங்களை அலங்கரிக்க எழுந்தருளுகின்றனர் அன்னுரை, வரவேற்று, அவர் வைபவத்தை படித்து உணர்ந்து, அவர் ஆசீர்வாதம் யாவரும் பெறுவாராக.

சுபம் மங்களம்

எம். எ. ரங்கஸ்வாமி
ஆசிரியர்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

ஸ்ரீ காஞ்சீ வாதிகேசரி அழகிய மணவாள ஜீயர் மடம்
சின்ன காஞ்சீபுரம்

ஸ்ரீ உ. வே. ஸ்ரீமண்டயம் அனந்தாம் பிள்ளை ரங்கஸ்வாமி அய்யங்கார் அவர்கள் இயற்றிய "ஸ்ரீராமாநுஜவைபவம்" என்கிற பாமாலையை பார்த்தேன். மிகவும் எளிய நடையில் எல்லோரும் அநாயாஸமாக அதிகரிக்கக் கூடியதாயிருக்கிறது. உள்ளடங்கிய விஷயங்கள் ஆழ்ந்த கருத்துகளுடன் அமைந்திருக்கின்றன. இராமாநுஜரின் வைபவம் பல வகையாக கையாளப்பட்டிருக்கிறது இந்நூல் நடை அழகையும் கையாண்டிருக்கும் விஷயங்களின் சீர்மையையும் கவனித்தால் நூலாசிரியரின் ஆழ்ந்தவை துஷ்யம் தெரிய வருகிறது. வேதாந்த விஷயங்களையும், பூர்வர்களுடைய சரித்திரங்களையும் எளியதாக உணர்த்தவல்ல இந்நூல் ஆபால விருத்தர்களெல்லோருக்கும் ஆதரணீயமாயிருக்கு மென்பதில் ஐய மில்லை இந்நூலாசிரியர் ஒரு பெரிய லௌகிக பதவியிலிருந்து புகழ் பெற்று வைதிக சிரத்தையுடன் ஸம்ப்ர தாயக நூல்களில் ப்ராவண் யத்துடன் வருவது ஸ்லாகிக்கத்தக்கது. இவர் மேல் மேலும் இப் படியே ஆசார்யக டாக்ஷம் பெற்று பல நூல்களை வெளியிடுவார் என்று ஆசாஸிக்கப்படுகிறது.

அழகிய மணவாள யதீந்த்ர ப்ரவண
ராமாநுஜ ஜீயர்

ஸ்ரீமதேராமாநுஜாயநம :



ஸ்ரீ பெரும்பூதூர் உடையவர்

"பூதூரில் வந்துதித்த புண்ணியன்"

—ஜனன்யாசார்யர்

ஓம்

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

" சுக்லாம்பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்
ப்ரஸன்ன வதனம் த்யாயேத், ஸர்வவிக்னோபசாந்தயே !"

பொதுத்தனியன்கள்.

ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்,
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்.

லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம்,
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம்.

யோ நித்யமச்யுத பதாம்புஜயுக்மருக்ம வ்யாமோஹதஸ்
ததிதராணி த்ருணாய மேநே,
அஸ்மத்குரோர் பகவதோஸ்ய தயைகஸிந்தோ:
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே.

மாதாபிதா யுவதயஸ் தநயா விபூதி: ஸர்வம் யதேவ
நியமேந மதந்வயாநாம்,
ஆத்யஸ்ய ந; குலபதேர் வகுளாபிராமம் ஸ்ரீமத்
ததங்க்ரி யுகளம் ப்ரணமாமி மூர்த்நா,

பூதம் ஸரச்ச மஹதாஹ்வய பட்டநாத ஸ்ரீபக்திஸார
குலசேகர யோகிவாஹாந்,
பக்தாங்க்ரிரேணு பரகால யதீந்த்ரமிச்ராந்
ஸ்ரீமத்பராங்குசமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம்.

பொதுத்தனியன்கள் முற்றுப்பெற்றன.

சுபம்—மங்களம்.

எம். ஏ. ரங்கஸ்வாமி.

ஓம்
ஸ்ரீ ராமஜெயம்.
ஸ்ரீ மதேராமாநுஜாயநம:

கலாவல்லியை வணங்குவோம்

(1) தமிழெனும் இனியப்பால் அமுதத்தை
தெளித்து, எடுத்து, காட்டி
தமிழுலகம், உய்ய வழிகாட்டி,
தாங்கி நிற்கும், வெண்மலர்த்தாயே!
தமிழ்ப் பாட்டும், பொருளும், பயனும்
தந்தருள்வாய், எனக்கு, கலாவல்லியே!
அமிழ்தமெனும் இன்கவிதை செய்திட
அளிப்பாயே சக்தியை சாரதையே!

(2) உள்ளத்தே உனைக்கொண்டு களித்து,
உடல்உருக, கவிமழை சிந்திறல்,
தெள்ளி தெளிக்கும் அம்மழையை நன்று
தேனுய் கொண்டு, களிக்கும் தாயே!
அள்ளி அள்ளி வரும் மொழிமழையை
ஆனந்தமாய் நோக்கும் தோகை மயிலே!
அள்ளி அள்ளி வரும் உனதருள்
அமுதத்தை, உண்டேன் கலாவல்லியே!

சுபம் மங்களம்.

எம். ஏ. ரங்கஸ்வாமி

ஓம்

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமதே ராமாநுஜாயநம.

பக்திபூங்காவில், உயர்தரமாய் மலர்ந்த ஆழ்வார்களை வணங்குவோம்.

" பொய்கைமுனி, பூதத்தார், பேயாழ்வார், தண்
பொருநல்வரும், குருகேசன், விட்டுசித்தன்
துய்யகுலசேகரன் நம் பாண நாதன்
தொண்டரடிப் பொடி மழிசை வந்த சோதி,
வையமெலாம் மறைவிளங்க வாள்வேலேந்தும்
மங்கையர்கோன் என்றிவர்கள் மகிழ்ந்துபாடும்
செய்யத்தமிழ் மாலைகள் நாம் தெளிய ஓதித்
தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே ! "

சுபம்—மங்களம்.

முதல் ஆழ்வார்கள் மூவர்.

(1) முதல் ஆழ்வார்கள் மூவரும் துவாபரயுகம்
முடிவில், சித்தார்தியில் ஐப்பசியில்,
பூதலத்தில், திருவோணம், ஆவிட்டம்,
பின் சதயத்தில், அவதரித்த மகான்கள் !
முதல்வர் பொய்கையார் காஞ்சியிலும்,
மற்றும் பூதத்தார் கடல்மல்லையிலும்,
முதல்வருள் கடையவர் பேயார்
மயிலையிலும் அவதரித்தார் ஆகும் !

எம். ஏ. ரங்கஸ்வாமி.

(2) பொய்கையில். பெற்றுமரையில், காஞ்சியில்
பாஞ்சஜன்யாழ்வார் அம்சமாய் வந்த,
பொய்கையாழ்வார் திருவோணத்தில் உதித்தார்!
பரமனின் சேஷித்தவத்திலே நோக்கு,
பொய்கையார் செய்த பிரபந்தங்களில்;
பாமாலை, சொல்மாலை, சூட்டினர்,
பொய்கையார், செய்ய சுடராழியானடிக்கு;
பொய்கைமுனி ஞானவிளக்கும் ஏற்றினர்!

(3) கதை, கௌமோதகி அம்சமாய்
கடல்மல்லையில் அவதரித்த பூதத்தார்,
தாதை நாரணற்கு நன்குருகி,
தான் ஞானச்சுடர் விளக்கேற்ற,
தத்வஜ்ஞாநாதியாய் ஆவிட்டத்தில் ஐப்பசியில்
திருக்கடல்மல்லை நாதனுய் வந்தார்!
தாதையைக்காண விளக்கேற்றிய பூதத்தார்
தாளிணையை பூதலத்தில் வணங்குவோம்!

(4) சதயத்தில் ஐப்பசியில் ஸ்ரீநந்தகாம்சமாய்,
சிறந்த மயிலத்தில், நெய்தல்தனில்,
உதயமான வள்ளல் பேயாழ்வாரே!
உலகளந்த உத்தமன் நாரணனே
ஆதலால், திருக்கண்டேன், பொன்
மேனிகண்டேனென்று
அருளினர் அவர்சூட்டிய பாசுரங்களில்!
பூதலத்தில் வந்துதித்த முதல்மூவரையும்
பணிந்து போற்றி மகிழ்ந்திடுவோம்!

திருமழிசைபிரான்

(5) கனகாங்கி பெயராள் அப்ஸரஸ்ஸினிடம்
கர்பத்தில் ஸுதர்சனும்சமாய் வந்து
கனகக்ருஷ்ணனாய் தைமாதம் மகாவில்
உதித்தார் திருமழிசையில் இவ்வாழ்வார்;
மனம்குளிர இனியறிந்தேன் உன்னை ;
மங்களமான நாரணன் நீயே ;
அனந்தனும் நீயே, கற்றவையும் நீயே
அத்தனும், அன்னையும் நீயே, என்றார் !

(6) துவாபராந்தம் சித்தார்தியில் மகாவில்
தைமாதம், திருமழிசையில் வந்தவர்,
நாவார நாரணனை வாழ்த்திட்டு,
நான்முகனுக்கும் பரன் நீயே என்றும்,
ஓவாத பல் பிறவியிலிருந்து, விடுவித்து,
ஓடிவந்து ஆட்கொள்ளும் நாரணனை
ஆவாகனம் செய்து, இதயத்துள்
ஆலிங்கனம் செய்தவர் திருமழிசைபிரானே !

நம்மாழ்வார்

(7) குருகைபிரான் வைகாசி விசாகத்தில்
குளிர்மதியாய் பஹுதான்யத்தில் ஸேனையர்கோன்
திரு அம்சமாய், இப்புவியில் அவதரித்தார் ;
தக்சச்சீர் சடகோபன் நம்பியே.
அருள்கொண்டு ஆயிரம் இன்தமிழ் பாடினார் !
அருள்கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே !
அருள்கொண்டாடும் அடியவர் இன்புற்று
ஆள்புக்கு காதல் அடிமை செய்வாறே !

நல்லார்நாடும் நன்குருகை மாநகரில்
நலமாக நாமுய்யவந்த சடகோபரே !
நல்லான நான்மறையைச் சொல்லால்
நாதமுனிக்கு சொல்லியருளிய முனியே !
அல்லன்ன குழலும், விசால நயனமும்
அகன்றமுகமும் கொண்ட முனியே !
நல்லார் பலர்வாழுந் திருக்கச்சியில்,
நித்தியமாய் கரிகிரிகீழ் கோயில்கொண்டபிரானே!

மறைப்பாற்கடலை அன்று திருநாவின்
மத்தால் கடைந்து தமிழாயிரத்தின்
மறைப்பொருளை அமைத்த முனியனை
மனதில்கொண்டு மனம்குளிர துதித்து,
நிறைமதிப்பெற்று, நலம் கண்டு
நாமுய்வோமே ! நல்லார் நவில்கின்ற
நிறையூர் குருகைமாநகரில் சென்று
நிறைப்பான் கழலில் சரன்புகுவோம் !

மதுரகவியார்

(8) சித்திரையில் சித்திரைநாள், மதுரகவியார்
சிறக்க வந்தார், திருக்கோளூரில் ! அவரேதான்
எத்திரத்திலும், பாகவதநிஷ்டைக்கு மேற்பட்டது
எதுவு மில்லை என்றூர் ! தெற்கு திக்கு வந்து
உத்தகங்கா தீரத்திலிருந்து, கண்டு கொண்டு
உத்தமர் சடகோபரை, சரணமடைந்தார் !
பத்திவெள்ளத்தில் மூழ்கி, உறைத்தார்
பாரங்குசரே தமக்கு பரனென்று !

கோதைநாயகி காட்டிய வழி
கல்லைப் பெண்ணாக்கிய வழி !
கோதைநாயகி சூட்டிய பூமாலை
கவர்ந்தது திருவ ரங்கத்து அம்மானை :
கோதைநாயகி கட்டிய பாமாலை
கவர்ந்தது அன்புடன் யாவருள்ளத்தையும் ;
கோதைதேவியை உள்ளத்தில் கொண்டால்
கருணையவளது, வெள்ளமாய் பொங்கிவரும் !

கோழிக்கோன் குலசேகராழ்வார்

பராபவத்தில் மாசிதனில் புனர்பூசம்
புண்ணியதினத்தில், கொல்லிநகரில்,
சீரான ஓர்ராஜரிஷிக்கு புத்திரனாய்,
சேரலர்கோன் குலசேகராழ்வார் வந்தார் !
ஆராஅமுதன் ஸ்ரீராமபிரானைப் போற்றி
அனவரதம் மகிழ்ந்தார் இவ்வாழ்வார் !
ஆராபக்தியுடன், கௌஸ்துபாம்சமாய், இவர்
அணியரங்கர் மணத்தூணை அடைந்துய்ந்தார் !

விட்ணுசித்தர் பெரியாழ்வார்

வேயர்தங்கள் குலத்தில் உதித்தார்
விட்ணுசித்தர், குரோதன வருடத்தில்,
வேயர்போற்றும் நகரம் வில்லிபுத்தூரில் !
வேதமயமான கருடாம்சமே அவர்ஆவார் !
மாயமணாளநம்பி பனிக்கடலை விட்டு,
மனத்துக்கினியனாய் மனதில் வந்து,
கோயில்கொண்டு, சுடரொளியாய் நின்று,
கொண்டனையே, இடவகை என்பால் என்றார் !

விப்ர நாராயணர்

மார்கழியில் பிரபவத்தில் கேட்டைதனில்
மண்டங்குடியில் அவதரித்தார் இவ்வாழ்வார்
பார்க்கப்பார்க்க நம்பெருமாளே, தினம்
பக்திவெள்ளத்தில் பாடி எழுப்புகிறார்
மார்கழியில் வனமாலாம்சமான
தொண்டரடிப்பொடியாழ்வார் !
மனம்குளிர, திருநாமப் ப்ரபாவத்தில்
அரங்கருக்கு தொண்டுசெய்து, துலங்கி
ஆட்படுத்தாயென்னை, உன்னடியார்கு என்கிறார் !

திருப்பாணாழ்வார்

துன்மதியில் ரோகிணியில் கார்த்திகையில்
திருப்பாணர், உறையூரில், ஸ்ரீவத்ஸாம்சராய்,
நன்மதியில், உதித்த, வள்ளலாவார் !
நல்லபாணில், நதிக்கரையில் நின்று,
தன்அமுதனை, போற்றிபாடி, மகிழ்ந்தார் !
திருமுனிதோழில் ஏறிசென்று மதிளரங்கர்
முன்நின்று, ''என்னமுதனைக் கண்டகண்கள்
மற்றொன்றினைக் காணவே'' என்றார் !

திருமங்கி ஆழ்வார்

கலியில்வந்த பரகாலன் திருநகரியில்
கிருத்திகையில், கார்த்திகையில் நளவருஷம்,
கலியனாய் சாரங்காம்சராய் உதித்தார் !
குமுதமலர் கொய்யவந்த குமுதவல்லியை
கலியன்கண்டு உகந்து மகிழ்ந்து
கன்னியை மணந்து வாழ்ந்தார் !
ஆலிநாடன், அருள்மாரிப் பெயரார்
ஆனையின் துயர்தீர்த்தவனை துதித்தார் !

ஓம்

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமதே ராமாநுஜாயநம:

வன்மையும், இளமையும் மாறி, வன்பல்
விழுத்து, இருகண்களிருண்டு, நரைதிரை வந்து
உழலுவதற்கு முன்னமே, ஸ்ரீபெரும்பூதூர் வள்ளல்
இராமாநுஜரை வணங்கி வழிபட்டு, வளரொளி
மாயோனை வழிபடுதல் வேண்டும் !

விசிஷ்டாத்வைதவம் (ஸ்ரீவைஷ்ணவசித்தாந்தம்)

உடல்வேறு, உயிர்வேறு, உயிருக்கு
உயிரான்வேறு, இதுவே விசிஷ்டாத்வைதம்;
உடல்வேக, உயிர்விட, உயிருக்கு
உயிரான், சொல்வான் விதியின்விளைவென்று;
உடல்சிறை, உயிர்விட, உயிருக்கு
உயிரான், அவ்வுயிரை ஆட்கொள்வான்;
உடல்சிறை, உயிர்விட, உயிருக்கு
உயிரான் சரண்புக்கு ஆசான்
வழிபடவேண்டும்.

முன்னுரை

ஆழ்வார்களில் முதல்ஆழ்வார்கள் மூவரும், பொய்கையார் (காஸாரயோகி), பூதத்தார் (பூதயோகி), பேயாழ்வார் (ப்ராந்த யோகி), திருமழிசை ஆழ்வார் (பக்திஸாரர்) என்பவரும், த்வாபர யுக கடைசியில், B. C. 4080 இருந்ததாக தெரியப்படுகிறது. பிரதிவாதிபயங்கரம், மகாவித்வான், காஞ்சி அண்ணங்கராசார்ய ஸ்வாமிகள் ஆழ்வார்கள் வைபவத்தை சொல்லுங்கால், இவ்வாழ் வார்கள் முதலாழ்வார்கள் மூவரும் தேஹளீசன் என்று பிரஸித் தரான திருக்கோவலூர் ஆயனாரை திருவடிதொழுது விடைபெற்று நெடுங்காலம் திருப்பதிகள் தோரு சென்று, மங்களாசாஸனம்

செய்து, யோகபலத்தாலே ஆயிரக்கணக்கான ஸம்வத் ஸரங்கள் இந்த மண்ணுலகத்தில் வாழ்ந்திருந்து சேதனர்களை உஜ்ஜீவித்தருளினார்கள் என்கிறார் !

மதுரகவியாழ்வார் B. C. 3162 ஈச்வர ஸம்வத்ஸரம், அவதரித்து 130 வருஷமிருந்தார் நம்மாழ்வார் கலியுக பிராரம்பத்தில் B C 3101 பஹுதான்ய ஸம்வத்ஸரத்தில் அவதரித்து 35 வருடகாலமிருந்தார் என்பார் குலசேகராழ்வார் B. C. 3073 பராபவ ஸம்வத்ஸரத்தில் அவதரித்து 67 வருடகாலமிருந்தாரென்பார் !

பெரியாழ்வார் B. C. 3054 க்ரோதனஸம்வத்ஸரத்தில் அவதரித்து 85 வருடங்களிருந்தார் என்பார்,

ஆண்டாள் B. C. 3003 நள ஸம்வத்ஸரத்தில் அவதரித்தவரென்பார். தொண்டரடிப்பொடியாழ்வார் B. C. 2812 ப்ரபவ ஸம்வத்ஸரத்தில் அவதரித்து 105 வருடம் இருந்ததாக தெரிகிறது.

திருப்பாணாழ்வார் B. C. 2758 துர்மதி ஸம்வத்ஸரத்தில் கண்டு, 20வருடம் வாழ்ந்ததாக தெரிகிறது.

திருமங்கையாழ்வார் B. C. 2703 ஸம்வத்ஸரத்தில் தோன்றி 105 வருடம் இருந்ததாக தெரிகிறது.

A. D. 731 டிசம்பர் 18 தேதியில் திருப்பாவை தோன்றியதாக அறிஞர் திரு மு. இராகவய்யங்கார் கருதுகிறார். ஆண்டாளும், பெரியாழ்வாரும் A. D. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தார்கள். இந்த நூற்றாண்டு இறுதியில் வாழ்ந்தவர் திருமங்கையாழ்வார் என்பது, ஸ்ரீராகவய்யங்கார் கருத்து, ஆனால் நம் குருபரம்பரைக்கு இது விரோதமாயிருக்கிறது.

ஆசார்யர்களில் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் 788 A. D. தோன்றி தம் முப்பத்திரண்டாம் வயதில் A. D. 820 மறைந்தார். அத்வைத சித்தாந்தத்தை நிலை நிருத்தினர்.

துவைத மதத்தை நிலைநிருத்திய மத்வாசரியார் A. D. 1198 முதல் A. D.1275 வரை அதாவது 77 வயது வரை வாழ்ந்தவர் என்பார்கள்.

இந்த மத்வாசாரியர் தோன்றுவதற்கு நூற்றெண்பது ஆண்டுகளுக்குமுன் ஸ்ரீராமாநுசரின் தோற்றம். அதாவது A. D. 1017 அவதரித்து A. D. 1137 மறைந்தார். இவர்தான் ஸ்ரீ விசிஷ்டாத்வைதத்தை ஸ்தாபித்தார். ஆழ்வார்கள் எல்லோரும், ஆசார்யருள் முதல்வரான ஸ்ரீமந்நாத முனிகளுக்கு முற்பட்ட காலத்தவர்கள். ஆழ்வார்களுக்கும் ஆசார்யர்களுக்கும் மத்தியில் தொடர்பு இல்லாமலிருந்தது.

ஆழ்வார்கள் காலத்திற்கு பிறகு, அநுசந்தான மில்லாமல் மறைந்திருந்த ஆழ்வார்கள் திவ்வியப்பிரபந்தத்தை, புனருத்தாரணம் செய்ய தம் வாழ்நாளைப் பயன் படுத்தியவர் ஸ்ரீமந் நாதமுனிகள். வைணவதரிசன ஆசார்யர்களில் முதல்வர்! இவரே நம்மாழ்வார் அருள் பெற்று, யோகதசையில் திவ்வியப்பிரபந்தம் நாலாயிரத்தையும் அறிந்து, உலகுக்கு பயன்படுத்தியவர்.

இவர் சீடர்களில் தலைவர் உய்யகொண்டார். இவர் திவ்வியப்பிரபந்தத்தை பிரவசனம் செய்துக்கொண்டிருந்தார்.

இவருக்குபின் வைணவதரிசனத்தை வளர்த்தவர் மணக்கால் நம்பி. இவருக்குபின் நாதமுனிகளின் திருப்பேரனார் 'யமுனைத்துறைவர்' ஆளவந்தார் இந்த பிரவசனத்தை நிர்வாகித்து வந்தார்.

ஆளவந்தாருக்குபின், நம் எதிராஜர், ஸ்ரீராமாநுசர் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தை பிரவசனம் செய்து வளர்த்தார், தர்சனஸ்தாபகர் என்று பெயர் பெற்றார்.

நம்மாழ்வார் பகவானை ஆசாரியனாகக் கருதினார். "அறியாதன அறிவித்தும் அத்தா" என்று சொன்னார்! இப்பேர்பட்ட நம்மாழ்வார். மதுரகவியாழ்வாருக்கு தாம், திருவாய் மலர்ந்து அருளிய திருவாய் மொழியை உபதேசித்தார். மதுரகவியாழ்வார் நம்மாழ்வாரின் பரமபக்த சீடருமாவார்!

மதுரகவியாழ்வார் நம்மாழ்வாரை ரஸித்து அவருடைய பாசுரமே தமக்கு தேஹயாத்திரை என்றும் ஆழ்வாருடைய சொல்லின் இசையையே இந்த தேகத்துடன் அனுபவிக்கலாம், என்கிறார்.

" நாவினுல் நவிற்று இன்பம் எய்தினேன்
மேவினேன் அவன் பொன்னடி மெய்ம்மையே
தேவு மற்றறியேன்; குரு கூர்நம்பி
பாவின் இன்னிசை பாடித்திரிவேனே ! "

பின்னும் சொல்கிருர் மதுரகவியாழ்வார் இந்த உலகத்தில் மிக்கதே 'அருள்' அந்த அருள் கொண்டாடும் அடியவர் இன்புற அருளினுன் திருவாய் மொழியே .

" அருள் கொண்டாடும் அடியவர் இன்புற
அருளினுன் அவ்வருமறையின் பொருள்;
அருள் கொண்டு ஆயிரம் இன்தமிழ் பாடினுன்
அருள் கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே "

அப்பேர்பட்ட நம்மாழ்வாரின் அருள்கிட்ட, முந்துரமுன் அவரை பக்தியோடு துதித்து வணங்குவோம்.

அல்லும் பகலும் அனைவரும்
அனுபவிக்க, உயற்வேதம் நேற்கொண்டு,
சொல்லும், பொருளும், தொகுத்தவர்,
சடகோபர் ஆயிரம் கதிர் சூர்யனே.
கல்லும் கரைந்து, கல்கண்டாக,
கவியுள்ளம் பெருகிட, மயர்வேதம்
நல்காது, மானிடர் வாழ்ந்திட.
நம்மாழ்வார் அருளினுர் தமிழ் மறையை!

இப்பேர்ப்பட்ட புகழ் ஓங்கிய பாசெய்த மன்னுமாரன் சடகோபர் திருவடியை பணிவோம்.

சடகோபர் அருளிய தமிழ்மறையும்
சிலகால மானதும், மறைந்து, போகிட,
சடகோபரை நாதமுனிகள் துதித்து
சடகோபரின் அருளால் யோகதசையில்
சடகோபரின் தமிழ்மறையை அறிந்து
செவ்வையாய், அதர்க் கெலாம் தாளம் வழங்கிட்டு
சடகோபரின் தமிழ் மறை இசைதந்த
சீடர் வள்ளல் நாதமுனியை வணங்குவோம்.

ஸ்ரீமந்நாத முனிகளின் சீடர்களில் தலைவரான உய்யகொண்டாரை வணங்கி, அவருக்குபின், வைணவ தரிசனத்தை வளர்த்தருளிய பெரியார் மணக்கால் நம்பிகளை வணங்குவோம்.

நாதமுனிகள் கண்ட அரங்கப் பெருஞ்செல்வத்தை ஓர் புதயலை காட்டுவதுபோல் காட்டினார் மணக்கால் நம்பி, நாதமுனிகளின் பேரனார் ஆளவந்தாருக்கு. அந்த ஆளவந்தாரையும் வணங்குவோம்.

ஆசார்யனை வழிபடுதல்:

அருமையுடன் ஆசானை அண்டியடைந்து
அன்புடன் வழிபடுதல் சிறந்த வழியென,
அருமறைகள் தமிழ்செய்தான் தாளேகொண்டு,
அறியவைத்தார் மதுரகவிகள் உலகோர்க்கு !
பெரும்பூதூர் வந்தவள்ளல் இராமாநுசர்,
பெரியநம்பி, ஆளவந்தார், நாதமுனிகளும்,
பெரும்புகழான் சடகோபர், உய்யகொண்டார்
போற்றிபாடிய மதுரவழியும் அதுவேதான்.

ஆக்கும்தொழிற்கு நான்முகனை வைத்திட்டு,
அழிக்கும் தொழிற்கு அரனை வைத்திட்டு,
காக்குந்தொழில் கைகொண்ட வேணுகோபாலா !
கோவர்த்தனகிரி எடுத்து ஆநிரைக்
காக்கவந்து அன்று அருளினவனே !
கலியுக இருள் நீங்கி மக்கள் வாழ
தக்கவழியில் அன்று உபதேசித்த
திலகமான ஆசானை கண்ணனே !

வைணவ பூங்காவில் மலராயுதித்த
வேதமலர் ஸ்ரீராமாநுசரை அண்டி,
வணங்கினேன் அவர் திருப்பாதங்களை;
வரம் அளிப்பார் அவரே யாவார்
கணக்கிலா கருணைபொழிய, அவர்
கவிதையாய் கட்டி, அவரிடம்
வைணவபூ மலராய் நிலைத்திடவே
வஞ்சமிலா மனதுடன் இட்டேன் இதை

மதிவிளக்காய் கவிக்கு நிறைபொருளாய்
மறைபொருளை விளக்கும் ஸ்ரீராமாநுசரை,
எதிராஜரை, எந்நாபதியை, ஞானியை,
ஏத்தும் திறத்தை எனக்கு ஸ்ரீதேசிகரே
எதிரில் வந்து அன்பாய் அளித்திட்டாரே!
ஏனவுருவனாய் பாரை இடந்தெடுத்தானே
எதிரில் ஸ்ரீராமாநுசரோடு வந்து,
எனக்கு தரிசனம் அளித்திடுவானோ.

அன்பே ஸ்ரீராமாநுசர் அருளாய்,
அருளே அவர் தகளியாய்,
இன்பமே அதில் ஊத்திய நெய்யாய்,
இறைவனின் சோதியே விளக்காய்,
முன்நிற்க, அச்ஜோதியை கண்டதும்
முக்கோல் முனிக்கு மலரிட்டு:
பொன்மொழி இன்பதமிழ் மொழியில்
பாமாலை சூட்டி மகிழ்வேனோ.

அனைத்துலகும் வாழப்பிறந்த எதிராஜர்
ஆழ்வார்களின் பெருந்தமிழ் மறைகளை,
அனைவருள்ளத்திலும் நன்று பதியச்செய்தார்;
ஆண்டவன் கோயில்களில் ஓதிடச்செய்தார் !
நினைவோம் பிறவியை நீக்கிடும் அப்பிரானை;
நந்தா விளக்கேற்றிய அப்பிரானை எதிராஜரை,
புனைவோம் இன்சுவைத் தமிழ் பாடல்களில்,
படைய அவர்த்திருவடித் தாமரையை.

ஸ்ரீராமாநுசர் அவதரித்தல்

"மாறனுரை செய்த தமிழ்மறை வளர்க்கவும்" உலகோரை உய்யச் செய்யவும், ஸ்ரீபெரும்பூதூரில் ஆதிசேஷன் அம்சமாய், பரமனின் நியமனத்தால் ஸ்ரீராமாநுசர் அவதரித்தார்.

ஸ்ரீ ஆஸுரிகேசவ சோமயாஜி, பூமிபிராட்டி எனும் காந்திமதி, என்பவர்களின் புத்திரராய், ஸ்ரீ ராமாநுசர் அவதரித்தார். ஸ்ரீ ராமாநுசருக்கு ஸகோதரிகள் இருவர். நாச்சியார் அம்மை யென்றும், தாமரையாள் அம்மை என்றும் பெயருள்ளார்.

ஸ்ரீ ராமாநுசர் அவதரித்த திருநாள், சித்திரையில் திருவாதிரை நாள். இந்நந்நாளைப்பற்றி ஸ்ரீ மணவாள மாமுனிவர் அவருடைய உபதேச ரத்தின மாலையில் பாசுரத்தில் 27 சொல்கிருர்.

"இன்றுலகீர் ! சித்திரையில் ஏய்ந்த திருவாதிரை நாள்
என்றையினும் இன்றிதமக் கேற்ற மென்ருன் என்ருவர்கு
சாற்றுகின்றேன் கேண்மின், எதிராஜர் தம்பிறப்பில்
நால் திசையும் கொண்டாடும் நாள்—"

எம்பெருமானுடைய தரிசனத்தை ஸ்தாபித்தருள,
சித்திரை மாதத்திருவாதிரையில் தொண்டை நாட்டில்
ஸ்ரீ பெரும்பூதூரில் அவதரித்த ஆதிசேஷ அம்சமாகிய
ஸ்ரீ ராமாநுசரை வணங்குவோம் !

திருவனந்தாழ்வானே, ஆதிசேஷனே, அன்று
தனது உரகவுடலையும் விட்டொழிந்து,
திருவுருவம் இராமாநுசரின் அடைந்து,
தொண்டை நாட்டில், ஸ்ரீ பெரும்பூதூரில் சித்திரையில்,
திருவாதிரையில் அவதரித்து அருளினன் !
திருமாலின் தரிசனத்தையும் நாட்டிவைக்கவே,
பேருதவி புரியத்தான் இப்புவியில் வந்தார்
பெரும்பூதூர் மாமுனியர் இராமாநுசரே.

சித்திரையில் திருவாதிரைத் திருநாள்
சிந்தினையில் கொண்டோர் யாவர்க்கும்,
எத்திரத்திலும் மேன்மையுடன் களிக்க,
எதிராஜர் அருள் புரிவார்.
முத்திதரும் வழிகாட்டி, சீடர்களை
முக்கோல் எதிராஜர் ஆட்கொண்டு,
சத்தியத்தை நிலைநாட்டி நாடெங்கும்,
செழிக்கச் செய்தார் சீடர் கோஷ்டியை!

பெரியபிராட்டி காந்திமதிக்கு பிள்ளான்
பிறந்ததும், திருமலைநம்பி, மாமா,
பெரியாள் காந்திமதியின் இல்லம் வந்து,
பிள்ளானின் அழகைக் கண்ணுற்று,
ஆரிய பிள்ளானே, புத்தியின் கொழுந்தோ,
அல்லது பக்தியின் கொழுந்தோ,
ஆரிய பிள்ளான் ஆசூரி வந்துதித்த
அப்புண்ணியக் கொழுந்தோ, என்றார்.

பிறந்த பிள்ளானுக்கு நம்பிகள் பார்த்து
பெயரிட்டார் இராமானுசர், என்று தான்;
பிறந்த வண்ணம், பெருகினார், ஜோதியாய்
பூத்தார், படிப்பைப்போல் பணிவுகாட்டினார் !
சிறந்தவராய் அறிவிலே வளர்ந்தார்;
சொல்லிலடங்காத கருணைப்போல் கடும்
துறவு கொண்டார் ஸ்ரீ ராமானுசர்; மகா
தயாநிதியே, ஓர் லட்சிய புருஷரே.

அவ்விளையோன் இராமனுக்கு அனுஜன்,
அத்தாணி சேவகம் செய்து, வாழ்நாள் முழுதும்.
எவ்விதத்திலும் இராமனுடன் இருந்து
எல்லையிலா கைங்கரிய செல்வம் பெற்றான்;
அவ்விதமே இராமநுசர் தொண்டு பூண்டே,
அன்புடன் கழித்து வாழ்நாள் முழுதும்,
எவ்விதத்திலும் தென்னரங்கர் செல்வம் முற்றும்,
எழில் திருத்திவைத்து, தமிழ்மறை வளர்த்தார்!

திருக்கச்சிநம்பியும், இராமாநுசரும்

பூவிருந்த வல்லிக்கு ஸ்ரீ காஞ்சி பூர்ணர் சென்று,
பூகொய்து வரதப்பனுக்கு மாலையிட்டு,
அவியா விளக்கான அவருக்கு கோயிலில்
ஆலவட்டம் வீசி பணிசெய்து வந்த
ஆவியான் ஸ்ரீகாஞ்சி பூர்ணர் நம்பிகளை
அன்று கண்டு காஞ்சியில், ஸ்ரீ ராமாநுசர்
தாவிசென்றார் பெருபணியும் பணிவும்
ஒருங்கே உருவெடுத்த நம்பியினிடம்.

ஸ்ரீ ராமானுசர் திருக்கச்சி நம்பிகள் திருவடிகளில் பணிந்து, உய்வு பெற வேணுமென்று பாரித்தார். பலவாறு அநுவர்த்தித்தார். நம்பிகள் இதற்குச் சிறிதும் இசையவில்லை. பின்பு தான் எவ்வாசிரியரிடம் சென்று வரணும் என்பதை தெரிந்துக் கொள்ள, நம்பிகளை விண்ணப்பம் செய்தார். தேவப்பெருமாள் வரதராஜரிடம் சென்று அவர் திருவுள்ளத்தை நம்பிகள் மூலம் அறிய விரும்பினார்.

நம்பிகளும் அன்றிரவு தேவப்பெருமாளுடன் வார்த்தை யாடு மடைவில் இக்கோரிகையை விண்ணப்பம் செய்ய, பெருமாளிடமிருந்து ஆறு வார்த்தைகள் பெற்றார். அதை ஸ்ரீ ராமானுசருக்கு தெரிவித்தார் !

ஸ்ரீ ராமானுசர் வயதில் இளையவராக இருந்தும், ஞானத்தில் முதியவர் என்று மதித்தார் திருக்கச்சி நம்பிகள்.

தேவப்பெருமாள் வரதராஜர் அருளிய ஆறு வார்த்தைகள் கீழ்கண்டவாறு

" செப்புகின்ற பரதத்வம், யானே யென்னச் செப்பதி, வேறொப்பிலதாய்
தரிசனமும் பேதமென்றே யுரைத்திடுக, தப்பிலாத வுபாய மதும்
'ப்ரபத்தி' யென்றே சாற்றிடுக, அப்பபுகல் கவிவையன்றி நினைவும்
வேண்டா அந்திமத்தில்; இந்தச் சரீரவ வதானந் தன்னில் இசையும்
மோக்க மது அந்த மில்லாக் குணத்தினனுக்காசாரியனும் பெரிய நம்பி
சிந்தையுள்ளே இவையெல்லாம் தெளிந்து நோக்கியிளையாழ்வார்,
முந்த நினைத்தானிவையிவையே மொழிந்து வருக போயென்றான். "

திருக்கச்சி அத்தியூரான் புள்ளையூர்வான்
துயரறுசுடரடியில் பணி புரிந்தவர்.
திருச்சச்சி நம்பியை கண்டு மகிழ்ந்த.
தேவப்பெருமாள், அருளிய ஆறுவார்த்தைகளை,
திருச்கச்சி நம்பியே உறைக்க அன்று
திருவுள்ளம் மகிழ்ந்து ஸ்ரீராமானுசர், பெரியநம்பி,
திருவடிகளிலே ஆச்ரயித்து சீடராய்
திருவிலச்சினை பெற்று புகழ்கொண்டார் !

ஸ்ரீராமாநுசரும், அவருடைய ஆசார்யர்களும் !

ஸ்ரீராமாநுஜருக்கு பஞ்சஸம்ஸ்காரமிட்டு, ஆட்கொண்டவர் பெரிய நம்பிகளே! அதனால் அவரே முக்கிய ஆசாரியர் பதவி வகிப்பார்: ஆனாலும், இராமாநுசர் திருக்கோட்டியூர் நம்பி திருமாலையாண்டான் திருமலை நம்பி, திருவரங்கப்பெருமான் அரையர், ஆகிய நான்கு ஆசார்யர்களையும் பணிந்து. அர்த்த விசேஷங்களையும், தரிசன இரகஸ்யங்களையும் தெரிந்து கொண்டார் ஆகையால் அவர் ஐந்து ஆசார்யர்களை யுடையவர் என்பார்கள்.

திருக்கோட்டியூர் நம்பி ரஹஸ்யார்த்தங்கள் சிக்ஷித்துக்கொடுத்தவர். திருமாலையாண்டான் திருவாய் மொழிப்பொருள் உபதேசித்தவர். திருமலை நம்பி ஸ்ரீராமாயண அர்த்தங்கள் ஸாதித்தவர்.

ஆழ்வார் திருவரங்கப்பெருமாள் அரையர் திவ்வியப்ரபந்தங்கள் நல் வார்த்தைகள் அளித்தவர்.

ஆசான்கள் ஐவராவார் எதிராஜருக்கு;
ஆசான்களை அன்போடு வழிபட்டு,
ஆசான்களின் உள்ளத்தைக் கவர்ந்து,
ஆசிமொழிபெற்று வாழ்ந்த வள்ளல்,
ஆசானாய் அன்புடன் சீடர்களை
ஆட்கொண்டு அமுதத்தை அளித்தார்.
பேசாதன பேசி சீடர்க்கெலாம்
பொலிந்த சிங்கம் ஸ்ரீராமாநுசர்.

பெரிய நம்பிகள்

ஓங்குதனு கேட்டையில் மார்கழியில்
ஒருயிராய் அவதரித்த பெரிய நம்பிகள்,
பொங்குபுகழ் ஆளவந்தார் தாளினை
பக்தியுடன் பற்றிய சீடராவார்;
எங்கும் பரவிய ஜோதி முனிவர்
எம்பெருமானாருக்கு அன்று இதமுறைத்தார்!
அங்கும் எதிராஜருக்காக சென்று
அன்று தன் கண்கழிழந்து வந்தார்!

பெரிய நம்பிகள் கண்ணிழந்து, கண்ணிழந்த
கூரத்தாழ்வான் மடியில் தலைவைத்துக்கொண்டு,
தன்பெண் அத்துழாய் அம்மையார் மடியிலே
காலை வைத்துக்கொண்டு, மரணம் அடைந்தார்!

அப்பொழுது அவருக்கு 105 வயது என்பார். அவர் தன கடைசி காலத்தில் அருளிய வார்த்தை கீழ்வருமாறு:—

"பாகவதன் தொண்டாற்றியோ, தியாகம் செய்தோ
உயிர்விடும் இடமே புநித நிலம் —"

ஸ்ரீராமாநுசர் மேல்கோட்டை, திருநாராயண புரம் இருக்கும்சமயத்தில், பெரியநம்பி, திருக்கோட்டியூர் நம்பி, திருமாலையாண்டான் திருவரங்கப் பெருமாள் அரையர், பெரியதிருமலை நம்பி திருச்சச்சி நம்பிக் எல்லாரும் காலமாய் விட்டார்கள் !

ஸ்ரீராமாநுசர் ஆச்ரம ஸ்வீகாரம் செய்தல்:

ஸ்ரீராமாநுசர் தம்தேவியாரை அவள் பிறந்தகம் அனுப்பிவிட்டு, உடனே ஸந்யாஸாஸ்ரமம் ஸ்வீகரிக்கத் திருவுள்ளமாய் காஞ்சி பேரருளாளன் திருமுன்பே, திருவனந்த ஸரஸ்தீரத்தில் தண்ட, காஷாயங்களை பரிக்ரஹித்து ராமாநுசமுனி என்றும், எதிராஜரென்றும் மடத்தில் வாழ்ந்து வந்தார். இவர் ஆச்ரமஸ்வீகாரம் செய்தருளி நின்ற படியை, முதலியாண்டானும், கூரத்தாழ்வானும், கேள்விபட்டு, ஸ்வாமி திருவடிகளிலே வந்து ஆச்ரயித்து பஞ்சஸம்ஸ்காரங்களும் பெற்று வாழ்ந்திருந்தார்கள்.

கூரத்தாழ்வான் எம்பெருமானாரின் முக்கியசீடர் !

வாயால் வருணிக்க இயலாத
    வஞ்சக்குழியை கடக்கும் கூர்த்தாழ்வான்,
ஓயாது பணிசெய்த நல்சீடர்
    எம்பெருமானார் எதிராஜ ஜீயர்கு!
சாயாது, சரக்காது தாம் சென்று
    செல்வமான இருகண்களும் இழந்து,
மாயாவி ராஜஸபையில் அன்று,
    மாமுனி எதிராஜரை பாதுகாத்தார்.

மேலுகோட்டையில் ஸ்ரீ எதிராஜர்

ஸ்ரீ ராமானுசர் மைசூர் தேசத்திலுள்ள திருநாராயணபுரம் சென்றார். அங்கு 12 வருடகாலம் நற்பணிசெய்து, செல்வப்பிள்ளையை கோயிலில் வைப்பித்து, மற்றும் கோயில் நிர்வாகத்தை நன்று நடக்கச் செய்து, எதிராஜ மடத்தை ஸ்தாபித்து, பின் ஸ்ரீரங்கம் சென்றுவிட்டார். அப்பொழுது அவருக்கு 100 வயதுக்குமேலாயிருந்ததென்பார்!

திருநாரணர் உகந்த புரமாகும்
திருநாராயணபுரம் எனும் மேலுகோட்டை
திருநாரணர் கோவிலில் பணிசெய்து
திருநாரணர் செல்வபிள்ளை தர்சனம் கிட்ட
ஒரு நாளும் தவராது அத்புதமாய்,
ஒருமையுடன் எதிராஜரே அங்கிருந்து,
பெருமகிழ்ச்சியுடன் பணியாற்ற ஓர்
பன்னிரண்டு வருடம், ஞானவெள்ளம் ஓடின.

மேலுகோட்டையில் எதிராஜர் வந்து,
மடத்தை விளக்காய் ஸ்தாபித்தருள,
மேலுகோட்டையில் ஞான வெள்ளம் பொங்க,
முனிவர் வாழ்ந்த ஈராறு வருடம்,
மேலுகோட்டை செல்வநாரணர் கோட்டை,
மறைகடலாய் விளங்கி துலங்க,
மேலுகோட்டை பிள்ளைமை காதல்போக,
மாமுனிவர் அரங்கநகர் சென்றார்.

திருவரங்கத்தில் இராமானுசர் !

ஸ்ரீ ராமானுசர் மேலுகோட்டையிலிருந்து ஸ்ரீ ரங்கம் வந்து சேர்ந்தார். அப்பொழுது அவருக்கு 100 வயதுக்குமேல் ஆயிருந்ததாம்! ஸ்ரீரங்கநாதரின் சந்நிதியில் பலவேறு கைங்கர்யங்கள் நடத்த ஏற்படுத்தினார். நல்ல பாகவதர்களை கைங்கர்யம் செய்ய ஏற்படுத்தினார்! இன்றியமையாத சீர்திருத்தங்களை வழிபாட்டு முறையிலும், நிர்வாகத்துறையிலும், நிறைவேற்றிவைத்தார்!

திருவரங்கக் கோயில் சீர்த்திருத்தத்தை
தகுதியான வழியில் நிறைவேற்றி,
திருவரங்கச் செல்வம் சிந்தாமலிருக்க,
திட்டமிட்டு கார்யங்களை நியமித்து,
பேருதவி செய்த எதிராஜரின் புகழ்,
பெரும்பாலும் காண்போம் இதய கீதமாய்,
ஒரு நாளும் மறவாதபடி காதலரும்,
ஓர் அத்புத காவலருமாய் விளங்கினர்.

திருவரங்கத்தை, ஞானப்பூஞ் சோலையாய், நன்று
தழைக்கச் செய்தவர்கள், ஆழ்வார்கள ஆசார்யர்கள்.
திருவரங்கத்து ஞானப்பூஞ் சோலையை அன்று
தனிப்பசுஞ்சுடர் சோலையாய் விளங்கிடவே
திருவரங்கத்து கோயிலில் பலசீர்திருத்தங்களும்,
தரமுசந்து செய்து விட்டார் ஸ்ரீராமாநுசரே!
திருவரங்கத்துக் கோயில் திருப்பணிகாரர், தமக்கு
தீங்கிட்டாலும், எதிராஜர் மன்னித்தாரவரை

மாறனருளிய பண்தரு பசுந்தமிழ்
மாலையில் கண்டு வரும் ஆனந்தத்தை,
சிறந்தோர் எதிராஜர் அனுபவித்து,
சீடர்களுக்கு மேகமாய் வர்ஷித்து,
அறம் விளக்கி, அழிந்தோரைத் திருத்தி,
அறநிலை நாட்டிவைத்த அன்பரேயாவார்.
மறைந்தும் மறையாத ஜோதியானர்.
மாறனடியை பணிந்த எதிராஜர்

மொழியைக் கடக்கும் பெரும் புகழார்
முக்கோல் ஆண்ட இராமாநுசரே,
வழியைக் காட்டியே சிஷ்யகோடிக்கு,
வண்மையில் அவர்களை ஆட்கொண்டு,
அழியாச் செல்வத்தை அளித்து விட்டு,
ஆண்டவன் திருவடி போற்றச் செய்து,
கழியா பாவக்கடல் கலபாமல்
கடந்தேரச் செய்யும் புநிதரே.

ஸ்ரீராமானுசரும் கோவிந்தபட்டர் (எம்பார்) சீடரும்

ஸ்ரீ ராமானுசர் திருவடிகளில் ஆச்ரயித்திருந்தவர்களில் எம்பார் ஒருவர். இவர் திருநாமம் கோவிந்தப்பட்டர்.

எம்பார் கூரத்தாழ்வானுக்கு இரண்டு திருக்குழந்தைகள் அவதரித்த சங்கதியை இராமானுசருக்குத் தெரியப்படுத்தவேணுமென்று, அக்குழந்தைகளை யும் கூரத்தாழ்வானையும், த்வயாநுஸந்தானம், சொல்லிக் கொண்டு. ஸ்ரீராமா நுசரிடம் அழைத்து வந்தார். அப்பொழுது, அக்குழந்கைளின் நன்மைக்கு, நீரே ஆசார்யராக வேணுமென்று, ஸ்ரீராமானுசர் எம்பார்க்கு சொன்னார். கூரத்தாழ் வானின் புத்திரர் பட்டர் என்று பிரஸித்திபெற்றவராய் விளங்கினார்.

ஸ்ரீராமானுசரின் வடிவழகில் ஈடுபட்டு, எம்பார் அருளிச்செய்த பாசுரம்:-

" பற்பமெனத்திகழ் பைங்கழலுன்றன் பல்லவமே விரலும்,
பாவனமாகிய, பைந்துவராடை பதிந்த, மருங்கழகும்,
முப்புரிநூலோடு முன்கையிலேந்திய, முக்கோல் தன்னழகும்
முன்னவர் தந்திடு மொழிகள் நிறைந்திடு, முறுவல் நிலாவழகும்,
கற்பகமே விழி கருணை பொழிந்திடு. கமலக்கண்ணழகும்,
காரிசுதன் கழல் சூடிய முடியும், கனநற்சிகை முடியும்,
எப்பொழுதும், எதிராஜன் வடிவழகு என்னிதயத்துளதால் "
இல்லை எனக்கு எதிரில்லை, யெனக்கெதிரில்லை, யெனக்கெதிரே.

எம்பார். அப்பெரியாரே, நல்லார்
எம்பெருமானார் உகந்த சீடர்
எம்பார், நம்பால் கருணைகொண்டு,
எதிராஜரின் அழகை சொன்னார்
எம்பார் சொல்லிய சொல்லழகு
எதியின் அழகை காட்டியது
நம்பால் அவர்காட்டிய அன்பு
நம்மால் சொல்லவே இயலாது.

பொருளல்லாத என்னை அழைத்து
புத்தியில் தான்புகுந்து, திருத்தி,
பொருளாக்கி வைத்த ஆசார்யரே,
பெரும்பூதூர் வள்ளல் என்றார் எம்பார்.
பெருகிட ஆசானிடம் அன்பு,
பிரிந்திட அவரை எனக்கு
பொருக்கமுடியா என்றார். அவர்
பொன்னடியே எனது பாக்கியமே.

முப்புரிநூலை மார்பில் அணிந்து,
முக்கோலை கையிலேந்தி ஆண்டவர்,
இப்பிறவி துயர் நீங்கிடவே,
இன்ப மொழியால் சொன்னதை செய்தோர்,
அப்புமேல் ஆதிசேடன்மேல் நன்று
அமர்ந்தான், ஜோதியான், திருவடியை,
இப்புவியிலே கண்டு அடைய
இராமாநுசரின் உதவி கொள்வார்.

மாயக்கடலை கலக்கும் மந்தரமலை, அம்
முக்கோல்! நாத்திக பெருவியாதிகளை.
காயகமாய் ஒழித்திடுவது அம்முக்கோல்!
கண்ணிய வேதாந்த விழுப்பொருள்களை
தூயவர்கள் அனுபவிக்க உதவியாய்,
தீபதண்டமாய் திகழும் அம்முக்கோலே!
நாயகனாய் திசை எட்டிலும் கலியிருள்
நல்க அதை அகத்துவது அம்முக்கோல்.

திருமலையில் அப்பனுக்கு சங்கு, ஆழி, அளித்த வள்ளல் ஸ்ரீராமாநுஜர்

திருமலையானுக்கு செல்வ பணிபுரிய
திருமலைக்குச் செல்ல, யாருள்ளாரென,
திருமலையாண்டானின் பேரருள் கொள்ள,
தயங்காது முன்வர யாருள்ளாரென,
பெரும்பூதூர் மாமுனிவர் கேட்டருள,
பெருமகிழ்ச்சியுடன் நின்று முன்வந்தார்,
ஒருவரே காண்மின்; அவரேதான் ஆவார்,
ஓர்சீடர் ஸ்ரீ அனந்த ஆண்பிள்ளை என்பார்.

திருமலையில நந்தவனம் எற்ப்படுத்தி
திருமலையானுக்கு பணிசெய்ய வந்த,
திருமலை ஸ்ரீ அனந்த ஆண்பிள்ளை ஆழ்வான்,
தகுந்த பெரும்சீடர் எதிராஜரின்
திருமலைக்கு அன்றுசென்று, அப்பனுக்கு
திருசங்கும், திரு ஆழியும் அளித்து
பெருமகிழ்ச்சி கொண்டார் அப்புநித அண்ணல்
பெரும்பூதூர் மாமுனிவர் எதிராஜர்.

எதிராஜர் செய்தருளிய திவ்விய ஸூக்திகள்

ஆசார்யர் இராமானுஜர் ஓர்
அணையா விளக்காய் விளங்கி,
ஆசாபாசத்தை அறுத்து ஓர்
ஆரா அமுதாய், ஞானத்தை ஊட்டி,
வாசாமகோசரமாய், ஸ்ரீ ஸூக்திகளை செய்து,
வாயார சொல்லி, நன்று திகழ்ந்தாரே!
ஆசார்யர் இதயத்தில் புக்கேன்
அன்பு ஜோதியை அங்கு கண்டேன்.

மாமுத்தும், நவநிதியும் சொரியும்
மேகங்கள் ஒத்த ஸ்ரீ எதிராஜர்
மாமுத்து, நவநிதி, ஸ்ரீஸூக்தியை,
மங்களமாய் உலகுய்ய வைத்தார்;
அமுதமாய் யாவர்க்கும் விளங்கிய
அத்திவ்ய ஸூக்திகளைப் பருகி
நாமும் அவ்வாசார்ய சிகாமணியை
நமஸ்கரித்து அவர்சரண் புகுவோம்.

திருமாலின் சங்கை ஒத்தது
திவ்விய ஸ்ரீஸூக்திகள் எதிராஜரின்;
திருமாலின் சங்க நாதமாய்
திகழும் எதிராஜரின் ஞானஒலி:
திருமாலின் திருவடி அண்டிட
தாமரையாள் திருவடியை போற்றிட,
திருமாலின் அருள்கிட்டிட, உதவி
தந்தருள்வார், ஆசார்யர் எதிராஜரே.

பூமாலைகள் கொஞ்ச நாளிகையில் வாடிடும்;
பொன்மாலைக்கு எப்பொழுவும் மணமில்லை;
பூமாலைகள், பொன்மாலைகள். நிலைத்திருது;
பூரணமாய் கவிமணம் குன்றாத
பாமாலைசூட்டி, அரங்கனை அணிசெய்த
பெருமை ஆழ்வார்களுக்கு ஆகும்; அப்
பாமாலைக்கு, ஸ்ரீபாஷ்யமென்ற ஞானகோட்டை,
பாதுகாப்பாக கட்டினார் ஸ்ரீஎதிராஜரே.

வைணவ பூங்காவில் மலர்ந்ததான,
வைணவ தரிசனத்தைக் காத்தருளின,
வைணவ ஜோதியான் எம்பெருமானார்,
விளக்கினார் சரமஸ்லோகத்தை யாவர்க்கும்,
வைணவ கோயில் கோபுரத்தில் நின்று!
வைணவராய் விளங்கினார்கள் பக்தாதிகள்.
வைணவமே உலகுக்கு தீபமாய்
வேதமே ஒளியாய் விளங்கச் செய்தனரே.

ஆசார்ய சிகாமணி இராமநுசர் திருமுடி
அண்டிய முற்பட்ட முனிவர்களும்,
ஆசார்ய சிகாமணியின் திருவடித் தாமரையை
அண்டிய பிற்பட்ட ஆசார்யர்களும்,
வாசாம கோசரமாய், அவரைப்பற்றி சொல்லியது
வாயார சொல்லிட சாத்தியமில்லை.
நேசாதவரும் நன்று உணர்ந்து, ஸ்ரீராமாநுஜரை
நேசி நலம் கண்ட மகிமை என்னே.

குணம்திகழ் கொண்டல், நமது
குலம் கொழுந்து ஸ்ரீஎதிராஜரே தான்,
மணம்தரும் தமிழ் மறையில்
மகிழ்ந்து கேட்டு கொண்டு, மாமலராளை
புணர்ந்த பொன்மார்பன் புகழை
புணர்த்த யாவருள்ளத்திலும், அவர்கள்
உணர்ந்து ஸ்ரீ எதிராஜர் அன்பை,
உலகமுய்ய, அவரேசரண் என்றார்.

இப்பார்முழுதும் புகழ் உடையார்
இராமாநுஜர் திருப்பாதக் கமலத்தில்,
இப்பாரிலுள்ளோர் வந்து வணங்கிட்டு,
இப்பிறவிதுயர்த்தீர வேண்டினர்!
தப்பாது தயங்காது தயைகாட்டி,
திருமாலின் தாளிணையோடு ஆர்த்து,
எப்பாவமும் துலைத்து ஓடச்செய்த
எம்பெருமானாரின் செயலே செயல்.

ஒருயிராய் விளங்கி உலகுக்கெலாம
ஒன்றிநின்ற உத்தமரான புருஷா!
குருமார்கட்கு உலகில் ஆரியராய்,
கவிகள் பாடிபோற்றிய அமுதனே
தருமத்தை கசங்காக்காத்து, வளர்க்க
திருக்கோயிலில் புகுந்த பெரியோரே!
திருமாலின் கோயில்களில் நற்பணிகள்
துலங்க வழிகாட்டியாய் நின்றவரே.

மேகவண்ணன் கண்ணபிரானை எப்பொவும்
மனதில் கொண்ட இராமாநுசர்
மேகவண்ணனாய் திகழ்ந்து வந்தவரே!
மக்களிடத்தில் மனம்குளிர மகிழ்ந்து
மேகவுருவாய் உபதேச மழையை தான்
மங்களமாய் உலகுக்கு சொரிந்தார்!
மேகநீர்தேடும் சாதக பக்ஷியைப் போல்
மானிடர் பருகினரே அந்நீரை.

வேதத்திறம் தேரார் தீயவரையெலாம்
வேதமுதல்வனே மாயன் குறைப்பான்;
வாதப்போரில் தீயவரை எதிராஜர்
வெல்வார் வேதமுதல்வனின் அருளால்;
நாதமுனி, பராங்குசனார் ப்ரபந்தத்னத
நன்று பரிந்து கற்று, கானமுற
நாதத்திதிலும், தாளத்திலும் கண்டுறைத்தார்
நாதமுனியை இராமாநுசர் உகந்தாரே.

செல்வச்சிறுமியர்கள் கோபிகைகளே
செல்வமானுர்கள் அன்று கண்ணபிரானுக்கு;
செல்வப் பெருங்குளாம் அரங்கநாதனின்
செல்வமான பாகவதர்களே என்பார்!
செல்வமாய் அருள்சுரந்தார் எதிராஜர்
சொல்லி " அய்யோ என்று " தாழ்ந்தார்களுக்கெலாம்!
நல்வழியை காட்டி நாடினுர்க்கு, அவர்
நாடெங்கும் நலம்திகழச் செய்தாரே.

திசை எட்டினுள்ளும் கலியிருள் வீசிவிளங்க,
தத்தளிக்கும் தொண்டர்களுக்கு உதவிசெய்ய,
திசையனைத்தும் ஒளிமயமாக விளங்கச்செய்ய
திருநாட்டில் அவதரித்தார் இராமாநுசர்!
ஆசைமேல் ஓங்கிட, அவரிடத்தில் அன்புகொள்ள,
அனைவர் நெஞ்சுள்ளும் அவரே புகுந்தனரே!
இசையையுடைய பெரியதிருமொழி உண்டு,
இவ்வுலகில் அழகிய சிங்கமாய் விளங்கினுரே

மங்கையர்கோன் கலைப்பெருமான் பாடிய
மணமிக்க, ஒலிமிக்கப் பாடலை
சிங்கம் போன்ற எதிராஜர் பரவிட,
சென்றமிடமெங்கும் அவை ஓங்கிட,
பொங்கும் கீர்த்தியான் அவர் திருவடியில்,
பணிந்து, தென்னரங்கத்தம்மான் அணி
பங்கயம்மாமலர் பாவையைப் பணிந்து,
போற்றிபாடி இன்இசையில், மகிழ்வோம்.

எதிராஜர் அவர் அந்திம காலத்தில் பிரபன்னர்களுக்கு அருளிய பிரபன்னும்ருதம்:

பரமாசார்யர் எதிராஜர் அந்திம காலத்தில்
பாகவதர்களுக்கு அருளிய நல்வார்த்தைகள்,
பரம யோக்கியமாயும் என்றும் நிலைத்ததாயும்,
" ப்ரபன்னும்ருதம் " என்று பெயருள்ள பொருளாகும்;
பரமனையே அடைந்திட ஓர் வழிகாட்டியாய்,
பாகவதர்களுக்கு சுலபமாய் அறிவிக்கும்
" ப்ரபன்னும்ருதம் " புகழிலடங்காத, அத்புத
பொருளின்ப ஜோதியாய் எப்பொழுதும் விளங்குதே.

ஏற்றத்தாழ்வு கருதாமல் சமபுத்திகொண்டு,
எந்தகைங்கர்யமும் யாரும் செய்யவேண்டும்
ஏற்றத்தாழ்வு கருதாமல் பாகவதனுக்கு
எந்தபணியும் யாவரும் செய்யவேண்டும்.
குற்றமிலா மனதுடன் பாகவதனுக்கு,
கைங்கர்யம் செய்து, அதை குருவுக்குதான்
முற்றும் செய்ததாக எண்ணவேண்டும்;
முகுந்தனும், ஆசார்யரும் மகிழ்வாரே.

நம்பிகை தமிழ்மறையில் கொள்ளவேண்டும்;
நம்பினார் நலம்கண்டு வாழ்ந்திடுவார்.
நம்பிகை சமுதாயத்து வளர்ச்சிக்கும்
நலம்காட்டி, வழிகாட்டியாய் நிற்கும்;
நம்புலன்களை நன்று அடக்கிக் கொண்டு,
நாம் கைங்கர்ய நெறியில் முந்தவேண்டும்;
நம்பிகையுடன் பகவத் சாஸ்திரங்களில்
நிலைமை கொண்டு, அறிவை வளர்க்கவேண்டும்.

குணக்கடலான் பரமனை போற்றவேண்டும்:
குணக்கொழுந்து ஆசார்யரைப் போற்றி,
குணம் திகழும் பாகவதர்களைப் போற்றி,
குற்றங்கள் கூறாது இருக்கவேண்டும்;
மணம்திகழும் பகவானின் மந்திரத்தை,
மனதில் சரியாய் ஜபிக்க வேண்டும்;
வணங்கிட்டு கோபுரங்களை பரமனை
வாயார பக்தியில் துதிக்கவேண்டும்.

பரமனை வெறுப்பவர் ஓர்விதம்
பிரதிகூலர் ஆவார்; அவர்களை
புரக்கணித்து நாம் ஒதுங்கவேண்டும்;
பாம்பைப் போல் அவர்களை எண்ணவேண்டும்;
பரமனை பக்தியில் வணங்கு வோரை,
புநிதராய்க் கண்டு மகிழவேணும்;
பரமன் பொறுப்பு ஆத்மயாத்திரை;
போகும் தேகயாத்திரை விதியின் விளைவே.

அடைந்து பகவத் ஞானத்தை ஆசார்யர் மூலம்,
அடிமையாகாது ஐம்புலனுக்கு இருக்கவேண்டும்
அடைந்து புலனடக்கம் பகவத்கீர்த்தனத்தில்
அருமையான சுவையை அனுபவிக்கவேண்டும்;
அடைந்து நற்சுவையை பாகவதகீர்த்தனத்தில்,
அடைவதே அப்பெருபாகவதர்களை முக்தி
அடைந்திட ஓர் விலக்ஷணமான வழியாகும்
அவர்களிட்ட கட்டளையை நடத்திடவேண்டும்.

விஷ்ணு ஷோடசநாம ஸ்தோத்ரம்

ஔஷதே சிந்தயேத் விஷ்ணும்
போஜநேச ஜனார்தனம் (1)
சயநே பத்மநாபஞ்ச
விவாஹேச ப்ரஜாபதிம் ||

யுத்தே சக்ரதரந்தேவம்
ப்ரவாஹேச த்ரிவிக்ரமம் |
நாராயணம் தனுதயாகே
ஸ்ரீதரம் ப்ரியஸங்கமே || (2)

துஸ்வப்னே ஸ்மரகோவிந்தம்
ஸங்கடே மதுஸூதனம் |
கானரே நாரஸிம்ஹஞ்ச
பாவகே ஜலசயனம் || (3)

ஜலம்த்யே வராஹஞ்ச
பர்வதே ரகுநந்தனம்
கமனே வாமனஞ்சைவ
ஸர்வகாலேஷு மாதவம் || (4)

ஷோடனசதானி நாமாநி
ப்ராதருத்தாய ய : படேத்,
ஸர்வபாப விநிர்முக்தோ
விஸ்ணுலோகே மஹீயதே || (5)

சிந்தை செய்தால் விஷ்ணுவை அவர் அருமருந்தாவார்;
சென்னிமேல் கொண்டால் ஜனர்தனனாய் உணவளிப்பார்;
சிந்தைசெய்தால் எதிராஜரை அவர் அருமருந்தாவார்;
சென்னிமேல் கொண்டால், அவர் ஞான உணவளிப்பார்;
எந்தை பதுமநாபனை மனதில் கொண்டால்,
எந்நாளும் எக்கவலையுமிலாது வாழலாம்;
எந்தை ஸ்ரீராமானுசரே நம்மனதில் புக்கால்
எழில் தீபஜோதியாய் இருளை நீக்கிடுவார்.

வாமனனாய் வந்து உலகளந்தான்
வைத்து திருவடிகளை உலகமுய்ய,
வாமன சீலன் அருளிய அருள்போல்,
வெளியிட்டார் எதிராஜர் மறைப்பொருளை.
காமம் கண்ணனிடத்தே ஆமது என்ற
கருத்தை, உலகோர் உய்ய, உபதேசித்தார்;
நாமம் பலவிருந்தும், அவன் கீர்த்தியை
நாமஸங்கீர்தனத்தால் சொல்லுங்களென்றார்.

சலமத்தியில் அன்று வராகரூபியாய்
சென்று, பார்மங்கைத்துயர் தீர்த்தவனைப்போல்,
நலமளித்திட அன்று ரகுநந்தனனாய்
நாடெங்கும் சஞ்சரித்து வந்தவனைப்போல்,
பலமளித்திட பக்தாதிகளுக்கு அன்று
பாரில் உதித்த ஸ்ரீஎதிராஜர் செய்த,
காலக்ஷேபங்களும் கைங்கர்ய பூஜாவிதியும்
கண்முன் வந்து யாவரையும் ஆட்கொள்ளுதே.

பிரஜாபதியை விவாக காலத்தில் நினைத்தால்
பெருபாக்கியத்தை கொள்வார்கள் யாவரும்;
பிரஜாபூஜிதராய் எதிராஜரை நினைத்தால்
பக்தர்கள் மாபுண்ணியத்தை அடைவார்கள் !
பிரவாஹகாலத்தில் த்ரிவிக்ரமனை நினைத்து
பக்தியோடு பஜித்தால் வரும் பலனை,
பிரவாஹமாய் ஞானவெள்ளமாய் அனுபவிப்போம்
பக்தியோடு எதிராஜரை பஜித்தால்.

யுத்தத்திலே வெற்றிகாண சக்ரதாரிணி
யான பரமனை போற்றி பாடவேண்டும்.
சுத்தமனதுடன், வெற்றிகாண மாமுனி
சங்கசக்ரதாரி முக்கோல் ஆண்டவர்க்கு,
பூத்தவண்ணம் பூமலரிட்டு பக்தியோடு
பவித்திரமாய் பாமாலை சூட்டவேண்டும்;
காத்தவண்ணம் கமலநயனன் கண்ணனை
கும்பிட்டு, எதிராஜரை துதிக்கவேண்டும்.

பேய்ச்சியின் முலையுண்ட கண்ணன் பத்மநாபன்
பேய்ச்சியை மாய்த்து அன்று விரட்டினான்;
பேய்ப்பிடித்த பெண்ணுக்கு எதிராஜர் வந்து,
பேய்விரட்டி சென்றார் பத்மநாபனைப்போல்;
வாய்ப்பு கட்டிட, புவிமீது வாமனனாய்
வந்து மூவடி மண் தானம்கொண்டான
வாய்ப்பு காட்டிட! எதிராஜர் உலகில்
வந்து முக்கோலை தானும் கொண்டார்.

கோவிந்தனை மனதில் ஸ்மரித்தால், துஸ்வப்னம்
கரைந்தேகி நம்மையண்டாது போய்விடும்;
புவிமீது யாவர்க்கு முண்டாகும் ஸங்கடம்
போக, மதுஸூதனனை ஸ்மரிக்கவேண்டும்;
செவிக்கினிதான சொல்களை எதிராஜர்
சொல்லி சொல்லி. மதுஸூதனனைப் போலும், மற்றும்
கோவிந்தனைப்போலும் நமக்கு உதவிசெய்து
காஷாயதாரியாய் எல்லோரையும் ஆட்கொண்டாரே,

மாதவனை வடமதுரை மைந்தனை யாவரும்
மனதில் கொண்டு, மங்களமாய் போற்றிபாட
மாதவனே மனம்களித்து அருள்பொழிய,
மாமுனி எதிராஜர்கண்டு, ஆசிகூற,
நாதமுனி மாறன் உறைத்த தமிழ்மறையை,
நன்குணர்ந்து இசையிலணைத்து, தந்திட
நாமொலிய, தமிழ்மறையை பண்ணில் பாடி,
நாடெங்கும் துலங்கி விஷ்ணுலோகம் காண்போம்.

எதிராஜரும், யக்ஞமூர்த்தியும்

வாதுக்குவந்த யக்ஞமூர்த்தியோடு வாதாடி,
வாதில் வெற்றிகொண்ட எதிராஜரிடம்,
வாதுக்கு வந்த யக்ஞமூர்த்திகள், அவரடி
விழுந்து சீடரானதும், வாழ்வித்தாரே
மாதுர்யமாய் அவரை எதிராஜரே!
மங்களமாய் எம்பெருமானர் என்றுதான்
சாதுர்யமாய் அச்சீடருக்கு பெயர்சூட்டினர்;
சீடரவர் புகழுடன் விளங்கினர்.

ஆழியான், ஆருயிர் நாதன், தேர்பாக்கனய்,
அர்ஜுனனுக்கு உபதேசித்த, கீதையை,
அழியாப் பொருளை, காசினியோர் இடர்போக,
ஆனந்தமாய் விரித்துறைத்து எதிராஜர்
வழிகாட்டினரே! படிகொண்ட கீர்த்தியுள்ள
வால்மீகி இராமாயணம் பத்திவெள்ளமாய்
வழிந்து, எதிராஜரிடம் குடிகொண்டதே
வானேர்களும், மண்ணேர்களும், களித்திடவே.

எம்பெருமானர், எதிராஜர், உடையவர்
எண்ணிலா மகிமையான், ஆசார்யசிகாமணி
எம்பெருமான் திருவடியில் பக்தாதிகளை
எல்லோரையும் அண்டச்செய்துய்ய வழிகாட்டினர்!
எம்பெருமானரின் பேருதவியை, யாவரும்
எப்பொழுதும் மறவாது, மங்களமாய்
அம்மாமுனிவரை, பணிந்து, போற்றிபாடி
அம்மாமுனிவரை உள்ளத்தில் கொள்ளவேண்டும்.

ஆசான்கள் நம்மீது கருணைகொண்டு,
அளவற்ற நன்மைகளை செய்தனர்
ஆசான்கள் தத்வார்த்தங்களை உபதேசித்து
அனுஷ்டிக்கச் செய்தார் யாவரும் பிரபத்தியை
ஆசான்கள் வழிகாட்டியபடி நாம்செய்ய
அப்பிரபத்தியால் பிறவிதுயரை ஒழித்தனர்:
ஆசான்கள் திருமாலின் திருவடியை
ஆட்கொள்ள உபாயமாய் நின்றனர்.

அறத்தில் சீற்றம்கொண்ட உறுகலியை
அழிக்கும் திருநாமம் இராமாநுசர்தே
அறத்தில் ஞானத்தைகொண்ட சீடர்களை,
ஆட்கொள்ளும் திருநாமம் இராமாநுசர்தே
அறம் செப்பும் அண்ணல் இராமாநுசரின்
அச்சரணன்றி நமக்கு வேறொன்று மில்லை;
மாறன் பணித்த மறையுணர்ந்த, அவரை
மனதில் துதிப்பதே வாழவழியாகும்.

எதிதலை நாதன் இணைஅடி சிந்திக்க
என் மனதில் நல்லெண்ணம் வளர்கிறது
எதிதலை நாதன் இப்பாரில் புகழ்கொண்டோன்
என் இருவினைகளையும் தீர்த்து, என்னை
மதில்சூழ் தென்னரங்கத்தம்மானின் அடிகீழ்
மணம் ஊன்றியே நிற்க உதவிசெய்தார்!
எதிராஜர் இராமாநுசர் திருவடிகீழ்
என்சிந்தைபோய், அன்பு தாமரைக் கண்டேன்.

எதிராஜரின் புகழ்ஓதும் நல்லோர்
எக்காலமும் மறையினை காப்பாரே
எதிராஜர் திறத்தில் அன்பு பூண்டோர்
எந்நாளும் உலகோரை உய்திடுவார்
எதிராஜர் வந்து தோன்றிய பொழுதே
எல்லோரும் நண்ணரு ஞானம் கண்டனர்;
எதிராஜர் வந்து என்மனதில் தோன்ற
எந்நாளும் அவரடி சிந்திப்பேனே.

நல்லார்கள் நண்ணும் திருநாட்டை
நல்காயோ என்று கேட்டேன் எதிராஜரை!
வல்லார்கள் சொல்லும் கீர்த்தனத்தை
வாயாரசொல்ல எதிராஜர்முன், அவர்
எல்லாரும் வேண்டும் அருள்தர,
எண்ணிலா மகிமைகொண்டான் மாதவனை,
எல்லாரும் போற்றுங்கள் என்று சொல்லி
என்மனம் குளிரச் செய்தார் எதிராஜர்.

பயமேது, பலமேது, எனது
பாவங்கள் கழிய வழியேது:
நயமேது, நலமேது, உனது
நாமங்கள் மொழிவது ஒன்றேயாம்;
தயவேது, தாயன்போடு எனை
தாங்கி நிற்கும் உனைத் தவிர;
வயதேது, வானுளோர் இங்கு
வந்து எனை அழைத்து செல்வாரோ.

மதியில் மதியைக் கண்டேன்
மனதில் மாதவனைக் கொண்டேன்
நதியில் நிதியைக் கண்டேன்
நாவில் நாரணனை துதித்தேன்:

எதிரில் எதிராஜர் வர,
என்து பாவங்கள் கழிய,
எதிராஜர் திருஅடி பணிந்தேன்
என்னை அவரே ஆட்கொண்டாரே.

மாதவனின் பேரருள் பொங்கிட
மாமுனி ஸ்ரீஎதிராஜரே வந்திட,
வேதகோஷம் வேதியர்கள் செய்திட,
வேதமாதா காயத்ரிதேவி களித்திட,

வேதமுதல்வி வீணகானம் பொழிந்திட,
வேணுகானம் வானின்று வந்திட,
மாதாவா, மாதவா, என்று இறைஞ்ச,
மாதவன் திருப்பாதங்கள், என்சென்னிமேல் வந்தன.

"அத்திகிரியருளாளர், அடிபணிந்தோன் வாழியே;
அருட்கச்சி நம்பியுரையாறு பெற்றோன் வாயேழி
பத்தியுடன் பாஷியத்தைப் பகர்ந்திட்டோன் வாழியே;
பதின்மர் கலையுட்பொருளை பரிந்துகற்றோன் வாழியே;
சுத்தமகிழ் மாறனடி தொழுதுய்ந்தோன் வாழியே
தொல் பெரியநம்பி சரண்தோன்றினன் வாழியே;
சித்திரையில் ஆதிரை நாள் சிறக்க வந்தோன் வாழியே
சீர் பெரும்பூதூர் முனிவன் திருவடிகள் வாழியே."

" எண்டிசை எண்டிளை யாழ்வார் எதிராஜன் வாழியே;
எழுபத்து நால் வருக்கும் எண்ணுங் குறைத்தான் வாழியே;
பண்டைமறையை தெரிந்த பாஷியத்தோன் வாழியே;
பரகாலனடியிணையை பரவுமவன் வாழியே!
தண்தமிழ்நூல் நம்மாழ்வார் சரணுநான் வாழியே
தாரணியும் விண்ணுலகும் தானுடையோன் வாழியே!
தெண்டிரை சூழ் பூதூர் எம்பெருமானுர் வாழியே,
சித்திரையிற் செய்ய திருவாதிரையோன் வாழியே. "

சுபம் மங்களம்.

எம். ஏ. ரங்கஸ்வாமி
(ஸ்ரீ கிருஷ்ணதாஸர்)

ரங்கவிலாஸ்'
No. 9, South End Road,
Bangalore (20.)